சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்
முன்னிலை : திரு. M. சிவாஜி செல்லையா, L.L.M.,
சார்பு நீதிபதி, உத்தமபாளையம்.

2026 ம் வருடம் ஜுலை மாதம் 04–ம் நாள் சனிக்கிழமை

<u>அசல் வழக்கு எண். 282/2024</u>

<u>CNR No.TNTH050004472024</u>

SBI வங்கி, கம்பம் கிளை,
அதன் கிளை மேலாளர் .... வாதி

/எதிர்/

1. A. ரத்தினகுமார்
2. K. முருகன் .... பிரதிவாதிகள்

இவ்வழக்கு 19.06.2026 ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பு விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. S.R. ஷியாம் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் அழைத்தும் ஆஜராகாததால் அவர்கள் தோன்றாத்தரப்பினர் ஆக்கப்பட்டும், வாதி தரப்பு வாதுரைக்கு கேட்பு நல்கியும் முன்னிடப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

<u>தீர்ப்புரை</u>

வாதிக்கு பிரதிவாதிகள் வழக்குத்தொகை ரூ.4,90,201/–க்கு வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் தொகை முழுவதும் வசூலாகும் காலம்வரை 13.05% வட்டி செலுத்தக்கோரியும், இவ்வழக்கின் செலவுதொகையை வாதிக்கு பிரதிவாதிகள் செலுத்தக்கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்</u>

வாதி வங்கியில் 1,2 பிரதிவாதிகள் 1 ம் பிரதிவாதியின் கல்விச் செலவினங்களுக்காக வேண்டி ரூ.5,00,000/–ஐ கேட்டு கடந்த 29.01.2019 ம் தேதி வாதி வங்கியை அணுகியதில் வாதி வங்கி கடனை வழங்க முன் வந்தது என்றும், அவர்களின் வேண்டுகோளை ஏற்று கடந்த 31.01.2019 ம் தேதி ரூ5,00,000 /–ஐ வழங்கியது என்றும், அதன்பேரில் வாதி வங்கிக்கு தேவையான அனைத்து கடன் ஆவணங்களையும் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றும், மேற்படி கடனுக்கு பிரதிவாதிகள் 13.05% வட்டியில் மாதத் தவணையில் திருப்பி செலுத்த ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்றும், மேற்கண்ட கடன் தொகைகளின் தவணைகள் தவறும்பட்சம் அபராத வட்டி சேர்த்து செலுத்தவும் ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்றும், மேலும், வாதி வங்கியில் பிரதிவாதிகள் பெற்ற அசல் மற்றும் வட்டித்தொகைகளை செலுத்தக்கோரி பலமுறை நேரிலும் ஆட்கள் மூலமும்

துயர்ந்தும், பிரதிவாதிகள் யாதொரு தொகையும் செலுத்தாமல் செலுத்தி விடுவதாகவே கூறி வீண் காலம் கடத்தி வந்தார்கள் என்றும், 25.01.2022 ம் தேதியில் கடனை ஒத்துக்கொண்டு உயிர்பிப்பு கடிதம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றும், 31.08.2023 ம் தேதி வாதி வங்கி, வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றும், ஆனால் வாதி வங்கியில் பிரதிவாதிகள் பெற்ற கடனை ஒப்புக்கொண்டபடி திரும்ப செலுத்தாமல் வீண் காலதாமதம் செய்து வருவதால் வாதி வங்கியால் பிராதில் கண்ட கடன் தொகையை வட்டி மற்றும் செலவுத்தொகையுடன் திரும்பப்பெற வேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) பிரதிவாதிகள் அழைத்தும் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் அவர்கள் தோன்றாத்தரப்பினராக ஆக்கப்பட்டுள்ளார்கள்.

4) <u>பிரச்சனை மற்றும் அதற்கான தீர்வு</u>

1. வாதி வங்கி கோரியுள்ள பரிகாரம் செலவுத்தொகையுடன் கிடைக்கக் கூடியதா?

5) வாதி தரப்பு வழக்கை நிரூபணம் செய்யக்கூடிய வகையில் வாதி வங்கியின் கிளை மேலாளர் விக்னேஷ்கண்ணன் வாசா 1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலமாக 21.08.2018 ம் தேதிய வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் சமர்பித்த விண்ணபத்தின் அசல் வா.சா.ஆ.1 ஆகவும், 31.01.2019 ம் தேதிய பிரதிவாதிகள், வாதி வங்கிக்கு எழுதிக் கொடுத்துள்ள Leter of Arrangement வா.சா.ஆ.–2 ஆகவும், 31.01.2019–ம் தேதி Loan Sanction letter வா.சாஆ.–3 ஆகவும், 31.01.2019 ம் தேதிய Education Term loan/Hypothecation Agreement அசல் வா.சாஆ.–4 ஆகவும், 25.01.2022 ம் தேதிய 1,2 பிரதிவாதிகள் சேர்ந்து எங்களது வங்கிக்கு எழுதிக்கொடுத்த கடன் உயிர்பிப்பு கடிதத்தின் அசல் வா.சா.ஆ.–5 ஆகவும், 30.01.2019–ம் தேதிய Guarantee of Guarantee வா.சா.ஆ.6 ஆகவும், 31.08.2023 ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் ரசீது வா.சா.ஆ.7 ஆகவும், 05.09.2023 ம் தேதிய Acknowledgment Cards வா.சா.ஆ.8 ஆகவும், 30.08.2023 ம் தேதிய வழக்கறிஞர் அறிவிப்பு திருப்பப்பட்டதற்கான Return Cover வா.சா.ஆ.9 ஆகவும், 30.08.2023 ம் தேதிய கணக்குஅறிக்கை வா.சா.ஆ.10 ஆகவும், குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) மேலும், மேற்படி வா.சா.1 வாய்மொழி சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரையிலான ஆவணங்களை பரிசீலனை செய்யும்போது, 1 ம் பிரதிவாதியினுடைய கல்விச் செலவினங்களுக்காக கடந்த 29.01.2018 ம் தேதி பிரதிவாதிகள் கடன் விண்ணப்பம் கொடுத்து அது பரிசீலனை செய்யப்பட்டு 31.01.2019 தேதியில் வாதி வங்கி பிரதிவாதிகளுக்கு கல்விக் கடன் வழங்கி அதற்காக அவர்கள்

வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரையிலான கடன் ஆவணங்களை எழுதிக்கொடுத்து அதன் பின்னர் அசல் மற்றும் வட்டி தொகைகளை திரும்ப செலுத்தவில்லை என்ற விபரம் மேற்படி ஆவணங்கள் மூலம் தெரியவருகிறது. மேலும், வா.சா.ஆ. 5 வது ஆவணத்தை பரிசீலனை செய்யும்போது வழக்கு உரிய காலத்திற்குள் கடன் தொகையை திரும்பப்பெற தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) மேலும், பிரதிவாதிகள் ஒத்துக்கொண்டபடி கடன் தொகையை திருப்பி செலுத்தவில்லை என்பது வா.சா.ஆ.10 கணக்கு அறிக்கையை பரிசீலனை செய்யும்போது தெரியவருகிறது. எனவே 1,2 பிரதிவாதிகள் கூட்டாக கடன் பெற்றுள்ள நிலையில் அவர்கள் ஒத்துக்கொண்டபடி கூட்டாக கடன்தொகையை திருப்பி செலுத்த கடமைப்பட்டவர்கள் என இந்நீதிமன்றம் தீர்வு கண்டு, வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு செலவுத்தொகையுடன் கிடைக்கத்தக்கது என இந்த பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

8) அதே வேளையில் பிரதிவாதிகளுடைய கல்விக்காக அவர்கள், வாதி வங்கியிலிருந்து கடன் பெற்றுள்ள நிலையில், அவர்கள் பெற்ற கல்விக்கடன் மற்றும் அவர்களது குடும்ப சமூக சூழ்நிலையை கருத்தில் கொண்டு வாதி வங்கி 13.05% சதவிகித வட்டி கோரியிருந்தாலும் நீதியின் நலனின் பொருட்டு 9 சதவிகித வட்டி மட்டுமே கல்விக்கடனுக்காக வாதி வங்கிக்கு கிடைக்கக்கூடியது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9) இறுதியாக, வாதியின் வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, பிரதிவாதிகள் வாதிக்கு ரூ.4,90,200/-(Rounded off) மும் அசல் தொகை ரூ.5,00,000 /-க்கு பிராது தேதி முதல் தீர்ப்பு தேதி வரை 9% வட்டியும், தீர்ப்புக்கு மறுநாள் முதல் தொகை முழுவதும் வசூலாகும் தேதிவரை 6% பின்வட்டியும் சேர்த்து செலுத்த வேண்டுமென்று உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு 04.07.2026ம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

sd/-M.சிவாஜி செல்லையா
சார்பு நீதிபதி,
உத்தமபாளையம்.

<u>வாதி தரப்பு சாட்சி</u>

வா.சா.1 -விக்னேஷ்கண்ணன்(வாதி வங்கி கிளை மேலாளர்).

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 29.01.2019 | கடன் விண்ணப்பம் | அசல் |
| வா.சா.ஆ.2 | 31.01.2019 | Leter of Arrangement | அசல் |
| வா.சா.ஆ.3 | 31.01.2019 | Loan Sanction letter | அசல் |
| வா.சா.ஆ.4 | 31.01.2019 | Education Term loan/Hypothecation Agreement | அசல் |
| வா.சா.ஆ.5 | 25.01.2022 | உயிர்ப்பிப்பு கடிதம் | அசல் |
| வா.சா.ஆ.6 | 30.01.2019 | Guarantee of Guarantee | அசல் |
| வா.சா.ஆ.7 | 31.08.2023 | வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் ரசீது | அசல் |
| வா.சா.ஆ.8 | 05.09.2023 | Acknowledgment Cards | அசல் |
| வா.சா.ஆ.9 | 02.09.2023 | வழக்கறிஞர் அறிவிப்பு திருப்பப்பட்டதற்கான Return Cover | அசல் |
| வா.சா.ஆ.10 | 30.08.2023 | கணக்குஅறிக்கை | அசல் |

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>

– இல்லை –

sd/–M.சிவாஜி செல்லையா
சார்பு நீதிபதி,
உத்தமபாளையம்.

சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்
முன்னிலை : திரு. M. சிவாஜி செல்லையா, L.L.M.,
சார்பு நீதிபதி, உத்தமபாளையம்.

2026 ம் வருடம் ஜுலை மாதம் 04–ம் நாள் சனிக்கிழமை

<u>அசல் வழக்கு எண். 282/2024</u>

<u>CNR No.TNTH050004472024</u>

SBI வங்கி, கம்பம் கிளை,
அதன் கிளை மேலாளர் .... வாதி

/எதிர்/

1. தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கம்பம் டவுன், மணிநகரம் தெரு, கதவு எண்.B5, PWD குவாட்டர்ஸ் என்ற முகவரியில் வசித்து வரும் ஆறுமுகம் அவர்களின் மகன் A. ரத்தினகுமார்.

2. தேனி மாவட்டம், தேனி நகரம், அல்லிநகரம், கதவு எண்.2, கக்கன்ஜி காலனி அருகில் என்ற முகவரியில் வசிக்கும் காளிமுத்து அவர்களின் மகன் K. முருகன்.
.... பிரதிவாதிகள்

வாதிக்கு பிரதிவாதிகள் வழக்குத்தொகை ரூ.4,90,201/–க்கு வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் தொகை முழுவதும் வசூலாகும் காலம்வரை 13.05% வட்டி செலுத்தக்கோரியும், இவ்வழக்கின் செலவுதொகையை வாதிக்கு பிரதிவாதிகள் செலுத்தக்கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கு எழுந்த நாள் | - | 05.04.2024, |
| வழக்குமூலம் எழுந்த நாள் | - | 31.01.2019, 25.01.2022, 31.08.2023 ஆகிய தேதிகளில் கம்பம் கிளையில் உற்பத்தி. |
| தாவா மதிப்பு | - | ரூ.4,90,201 /– |
| நீதிமன்ற முத்திரைக் கட்டணம் | - | நீதிமன்ற முத்திரைக் கட்டணம் சட்டம் பிரிவு 22–ன் படி ரூ.14,707/– செலுத்தப்பட்டுள்ளது, |

இவ்வழக்கு 19.06.2026 ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பு விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. S.R. ஷியாம் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் அழைத்தும் ஆஜராகாததால் அவர்கள் தோன்றாத்தரப்பினர் ஆக்கப்பட்டும், வாதி தரப்பு வாதுரைக்கு கேட்பு நல்கியும் முன்னிடப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

தீர்ப்பாணை

| | |
|---|---|
| 1 | இவ்வழக்கு அனுமதிக்கப்படுகிறது. |
| 2 | பிரதிவாதிகள் வாதிக்கு ரூ.4,90,200/-(Rounded off) மும் அசல் தொகை ரூ.4,00,000 /-க்கு பிராது தேதி முதல் தீர்ப்பு தேதி வரை 9% வட்டியும், தீர்ப்புக்கு மறுநாள் முதல் தொகை முழுவதும் வசூலாகும் தேதிவரை 6% பின்வட்டியும் சேர்த்து செலுத்த வேண்டுமென்று உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 3 | இவ்வழக்கின் செலவுத்தொகை ரூ.17.359/-ஐ வாதிக்கு பிரதிவாதிகள் செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. |

செலவுத்தொகைப்பட்டியல்

| | | | வாதி தரப்பில் | பிரதிவாதிகள் தரப்பில் |
|---|---|---|---|---|
| 1 | நீதிமன்ற முத்திரைக் கட்டணம் | : | 14707.00 | |
| 2 | வக்காலத்து நாமாவுக்கு | : | 10.00 | |
| 3 | போஸ்டல் ரிஜிஸ்தர் நோட்டீஸ் | : | 300.00 | |
| 4 | பிளிடிங் சார்ஜ் | : | 100.00 | |
| 5 | லாயர் ரிஜிஸ்தர் நோட்டீஸ் | : | 1000.00 | |
| 6 | வழக்கறிஞர் கட்டணம் (ஜீனியர்) | : | 1242.00 | செலவுத்தொகைப்பட்டில் தாக்கல் செய்யப்படவில்லை |
| | மொத்தம் | | 17359.00 | |

2025ம் வருடம் ஜுலை மாதம் 04-ம் நாள் எனது கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

sd/-M.சிவாஜி செல்லையா
சார்பு நீதிபதி,
உத்தமபாளையம்.

OS.282/2024
தீர்ப்பாணை
நாள் 04.07.2026